அடையாள இலக்கம்

E

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2016

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

## இளைஞர் பிரிவு

(15 – 17 வயதுப் பிரிவு)

நேரம்: 2 மணித்தியாலங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

## பகுதி 1

அ) சரியான விடையின் கீழ்க் கோடிடுக. (10 புள்ளிகள்)

1) எளிது என்ற சொல்லின் எதிர்ச்சொல் எது?

அ) கடினம் ஆ) அரிது இ) இலகு ஈ) சுலபம்

2) பின்வருவனவற்றில் சினையாகு பெயர் எது?

அ) நீலம் வாங்கினான் ஆ) பொங்கல் உண்டான்

இ) வெற்றிலை நட்டான் ஈ) அவுஸ்திரேலியாவின் கோபம்

3) குயில் கூவும் என்பது போல, யானை ...............

அ) அகவும் ஆ) கதறும் இ) அலறும் ஈ) பிளிறும்

4) மலையும் மலை சார்ந்த இடம்:

அ) நெய்தல் ஆ) குறிஞ்சி இ) பாலை ஈ) மருதம்

5) மகாபாரதத்தில் வரும் பாத்திரம் ஒன்றின் பெயர் அல்லாதது?

அ) கர்ணன் ஆ) கண்ணகி இ) துரோணர் ஈ) துரியோதனன்

6) கீழ்வரும் பழமொழியைப் பூர்த்திசெய்யும் சொல்.

“திக்கற்றவனுக்குத் தெய்வமே ............................”.

அ) தோழன் ஆ) நண்பன் இ) வழி ஈ) துணை

7) ‘காட்டாறு’ நூலை எழுதியவர் யார்?

அ). செங்கை ஆழியான் ஆ) கோகிலா மகேந்திரன்

இ) இந்துமதி ஈ) அம்பிகைபாகர்

8) எழுபத்தைந்தாவது ஆண்டில் செய்யப்படும் கொண்டாட்டத்தை (விழாவை) எப்படி அழைப்பர்?

அ) பவளவிழா ஆ) வைரவிழா இ) வெள்ளிவிழா ஈ) பொன்விழா

9) பின்வருவனவற்றில் வல்லின எழுத்து அல்லாதது எது?

அ) ப் ஆ) க் இ) த் ஈ) ல்

10) ஏகலைவனின் மானசீகக் குரு யார்?

அ) அருச்சுனன் ஆ) இராமன் இ) துரோணர் ஈ) விசுவாமித்திரர்

**ஆ) கோடிட்ட இடத்தில் மிகவும் பொருத்தமான விடையை எழுதவும்.** (10 புள்ளிகள்)

1) குயில் கூவும் என்பது போல, மயில் ______________________

2) ஆறு சுவைகள் எவை?

______________________

3) மகாபாரதத்தைத் தமிழிலே முதலில் மொழிபெயர்த்து எழுதியவர் யார்?

______________________

4) உலகின் மிக நீளமான நதி எது?

______________________

5) 'ஆடிப்பிறப்புக்கு (பிறப்பிற்கு) நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே' என்ற வரிகளில் ஆரம்பிக்கும் பாடலை இயற்றியவர் (பாடியவர்) யார்?

______________________

6) திருக்குறள் நூலில் மொத்தமாக உள்ள குறட்பாக்கள் எத்தனை?

______________________

7) சந்திரன் என்ற சொல்லிற்கு ஒத்த கருத்துள்ள சொற்கள் இரண்டினைத் தருக?

______________________

8) ஐம்பெரும் காப்பியங்கள் எவை?

______________________

9) ஒரு நிகழ்ச்சியைப் பலரும் பார்ப்பதற்கு முன்னர் பரிசோதித்துப் பார்ப்பதை எப்படிக் கூறுவது?

______________________

10) பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்யவும்.

'ஆலையில்லா ஊருக்கு ______________________'

**இ) பின்வரும் சொற்களை அவற்றின் பொருள் விளங்கும்படி வாக்கியங்களில் அமைக்குக.**

(20 புள்ளிகள்)

1. **குளம்பு** ______________________________

______________________________

**குழம்பு** ______________________________

______________________________

2. **வெல்லம்** ______________________________

______________________________

**வெள்ளம்** ______________________________

______________________________

3. **விழை** ______________________________

______________________________

**விளை** ______________________________

______________________________

4. **பனி** ______________________________

______________________________

**பணி** ______________________________

______________________________

5. **திரை** ______________________________

______________________________

**திறை** ______________________________

______________________________

**ஈ) கீழே கேட்கப்பட்ட கேள்விகளுக்குச் சரியான விடைகளை எழுதுக.**

(10 புள்ளிகள்)

1 ஐந்து கண்டங்களின் பெயர்களை எழுதுக?

______________________________________________

______________________________________________

2) வானவில்லில் உள்ள ஏழு நிறங்களையும் அவை தெரியும் வரிசையில் எழுதுக.

______________________________________________

______________________________________________

3) கீழே தரப்பட்ட சொற்களை ஒழுங்கு படுத்திச் சரியான வசனத்தை எழுதுக.

போதும் / என்பது / ஒரு / மருந்து / மனமே / என்ற / பொன்செய்யும் / பழமொழி.

______________________________________________

______________________________________________

4) பஞ்சபூதங்கள் என்று சொல்லப்படுபவை யாவை?

______________________________________________

______________________________________________

______________________________________________

5) இந்த வருஷம் மளை பெய்யாததால் விழைச்சல் குறைவாக இருந்தது. என்ற வாக்கியத்தில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக?

______________________________________________

______________________________________________

______________________________________________

## பகுதி 2

உ) கீழே தரப்பட்ட கவிதையை வாசித்தபின் கேட்கப்பட்ட வினாக்களுக்குச் சரியான பதில்களை எழுதவும். (25 புள்ளிகள்)

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை; வெறும் புகழ்ச்சி யில்லை;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒருசொற் கேளீர்;
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்!.

உள்ளத்தில் உண்மைஒளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போற் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்;
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.

**வினாக்கள்:**

1) புலவர் ஏன் கம்பனை முதலிலே வரிசைப்படுத்துகிறார்? இந்த மூன்று புலவர்களுக்கு மட்டும் சிறப்புச் செய்வது ஏன் என நினைக்கிறீர்கள்?

.............................................................................................................................
.............................................................................................................................
.............................................................................................................................
.............................................................................................................................
.............................................................................................................................
.............................................................................................................................
.............................................................................................................................
.............................................................................................................................
.............................................................................................................................

2) தெருவெல்லாம் தமிழ்முழக்கம் செழிக்கச் செய்யாதவர்களை எதற்கு ஒப்பிடுகிறார்?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

3) 'பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம் விழிபெற்றுப் பதவி கொள்வார்' என எதற்காகக் கற்பனையில் மகிழ்கிறார் கவி.?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

4) 'இங்கமரர் சிறப்பு' – விளக்குக?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

5) அமிழ்தினும் இனிக்கும் தமிழை வெட்கப் படாது பொதுவிடங்களிலே இளைஞர்களைப் பேச வைப்பதற்கு என்ன செய்யலாம் என நினைக்கிறீர்?

......................................................................................................

......................................................................................................

......................................................................................................

......................................................................................................

......................................................................................................

......................................................................................................

......................................................................................................

......................................................................................................

**ஊ) கீழே தரப்பட்ட தலைப்புகளில் ஒன்றைப்பற்றி 250 சொற்களுக்குக் குறையாத கட்டுரையையோ அல்லது கதையையோ எழுதுக.** (புள்ளிகள் - 25)

1) அவுஸ்ரேலியாவில் வாழும் தமிழ்மக்கள், தமிழ்த் தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் பார்ப்பதனால் ஏற்படும் நன்மை தீமைகள் பற்றி மதிப்பிட்டு அவுஸ்ரேலியாவிலிருந்து வெளி வரும் தமிழ்ப் பத்திரிகை ஒன்றுக்கு ஒரு கட்டுரை எழுதுக.

**அல்லது**

2) சில காலம் காணாமற் போயிருந்த உமது பேசும் கிளி திரும்பி வீட்டுக்கு வந்தது உமக்கு ஆறுதலாக இருக்கிறது. கிளி திரும்பி வந்து உமக்குக் கூறிய கதையை எழுதுக.

விடைத்தாள் - ஊ)